فيهما لاتقدموا بصوم يوم ولا يومين وانت تقول بصيام يوم الشك فكيف خالفت ماثبت فى الصحيحين؟ في قول قامت ادلة أخرى معارضة لها فقدمت عليه فأقول له وهذا مثله.

இந்நூலின் மூலமாக நாம் நிரூபிக்கும் விடயத்திற்கு மாறுன எண்ணம் கொண்ட நீங்கள் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபை பின்பற்றுவோராயின் உங்களிடம் நாம் கேட்க நினைப்பது நபிகள் கோமான் ﷺ அவர்கள் நோன்பு நோற்பதற்கான தலைப்பிறை தென்படவில்லை யாயின் சந்தேகத்திற்கிடமான அத்தினத்தில் நோன்பு நோற்றவன் எனக்கு மாறு செய்தவனுவான் என்ற திருமொழி புகாரி, முஸ்லிமில் பதியப்பட்டிருந்தும், ரமழான் மாதத்திற்கு முன்பு ஓரிருதினங்கள் முற்படுத்தி நோற்க வேண்டாமென்ற நபிமொழி பதிவாகியும் இருக்க உங்களது இமாம் அவர்கள் இவ்விடயங்களுக்கு மாற்ற மான கருத்துக்களை கூறியதன் காரணமென்ன? எனக் கேட்டால் உங்களிடம் அறிவினது ஆராய்வுகள் இல்லை யாயினும் அறிவுடைய பெரியார்களின் ஆசீர்வாத மேனும் இருப்பின் உங்கள் சகோதரர்கள் கூறிய முடி வையே பதிலாக்குவீர்கள். (உண்மையும் அதுதான்)

எனவே நீங்கள் நான்கு வகையினரும் எப்பதிலை முன் வைத்தீர்களோ அப்பதிலே எம்கூற்றுக்கான பதிலும் என்பதை நன்குணர்ந்து கொள்வீர்களாக.

## இமாம் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் தன்னிலை விளக்கம்

இதுவரை உங்கள் முன் சமர்பிக்கப்பட்ட விடயங் கள் யாவும் படிப்போரின் சிந்தனையை இலகு முறையில் தொடும்படியான கருத்துக்களாகும். இப்போது நாம்

சற்று உயர்நிலையில் இருப்போர்கள் பற்றி சிந்திப்போம்.

குர்ஆன், ஹதீத், வரலாறு போன்றவைகளை ஆதார மாகக் கொண்டு நிரூபணமாகும் எமது கூற்றுக்கு எதிர்த் தரப்பான ஒருவர் ஹதீத் கலையை அறிந்து அதனை நூல் வடிவமாக்குபவராயினும் மார்க்கச் சட்டங்களை உள் ளடக்கிய (பிக்ஹின்) அறிவாற்றல் இல்லாதவர்களா யிருப்பின் அவர்கள் படித்துப்பட்டம் பெருத மருந்துக் கடைக்காரன் போன்ருகும். அவர் கடையில் மருந்துகள் இருக்கும். ஆனல் அவைகள் எதற்கு உபயோகமாகும் என்பதை அவர் அறியார். அதேநேரம் பிக்ஹின் அறி வைப் பெற்று ஹதீதின் கலையை அறியாதவர் கடைக் காரனன்று வைத்தியனை போன்றவர். இவர் அவரிடம் இல்லாத அறியாத மருந்துகள் எப்படி தயாரிக்கப்படும் என்பதை அறியார். அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் எனக்கு பல்கலையின் அறிவுகளையும் வழங்கியுள்ளான்.

واني بحمد الله قد اجتمع عندي الحديث والفقه والاصول وسائر الآلات من العربية والمعاني والبيان وغير ذالك فأنا اعرف كيف اتكلم وكيف اقول وكيف أستدل وكيف أرجع ، واما انت يا اخي وفقني الله واياك فلايصلح لك ذالك لأنك لاتدري الفقه ولا الأصول ولاشيئا من الآلات والكلام في الحديث والاستدلال به ليس بالهين ولايحل الاقدام على التكلم فيه لمن لم يجمع هذه العلوم فاقتصر على ما آتاك الله وهو انك اذا سئلت عن حديث تقول ورد اولم يرد وصححه الحفاظ أو حسنوه أوضعفوه لايحل لك في الافتاء سوى هذا القدر

நிச்சயமாக அல்லாஹ் எனக்கு ஹதீத், பிக்ஹு, மஆனி, பயான் மற்றுமுண்டான சகல அறிவின் கலை களின் நுணுக்கங்களையும் வழங்கியிருக்கின்றான். அல் லாஹ்வின் பேருதவியால் குர்ஆனில், ஹதீதில் எப்படி ஆதாரம் எடுக்க வேண்டும். எந்த வசனம் எங்கு, எதற்கு, எவர் பற்றி இறக்கப்பட்டது என்பதையும் அறிந்தவன். ஆனால் இஸ்லாமிய தோழா! அல்லாஹ் உனக்கு நேர்வழியில் செல்ல நல்லுதவி புரிவானாக! நீயோ எதையும் அறிந்தவனுமல்ல. குர்ஆனை, ஹதீதை விளங்குவது எளிதுமல்ல. உன் போன்றோர் அவை பற்றி பேசவும் கூடாது. பேசுவது அழகுமல்ல. சகல கலையிலும் பாண்டித்தியம் பெற்றவனே அதற்குத்தகுதி யானவன். எனவே நீ பெற்றதைக் கொண்டு போதுமாக் கிக் கொள்.

உதாரணமாக ஹதீத் கலையை எடுத்துக்கொள். ஹதீத் கிரந்தங்களில் பதிவாகியுள்ள சகல ஹதீத்களையும் படித்துத்தான் இருக்கின்றாயா? எத்தனையோ நபிமொழி களின் சொற்களுக்கான கருத்தையும், பொருளை அறிந் தாலும் அதன் நோக்கம் புரியாதவனுமாக இருக்கின்றாய்.

இந்நிலையில் காணப்படும் உன்னால் (பத்வா) மார்க் கத் தீர்ப்பு எப்படி வழங்க முடியும்? தகுதி வாய்ந்தோ ரிடம் அதனை ஒப்படைத்திடு.

لاتحسب المجد تمرا انت اكله

لن تبلغ المجد حتى تلعق الصبرا

பல கலைகளிலும் பாண்டித்தியம் பெற்று உயர் நிலையை கீர்த்தித் தன்மையை நீ வாயில் வைத்து ருசிக்கும் ஈத்தப்பழம் என நினைத்துவிடாதே! அந்நிலை பல கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் எல்லாம் பொறுமையென்னும் ருசி கொண்டு வென்ற பின்பே யன்றி கிடைக்க மாட்டாது.

## நான்கு மத்ஹபுகள்

தற்போது நான் நான்கு மத்ஹபுகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றும் சகலரிடமும் கேட்பது யாதெனில் எம் கண்மணி நபிகளார் ﷺ அவர்களின் காலம் தொட்டு ஹழ்ரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் அதிகார ஆட்சிக்காலம் வரை நான் உன்னைத் தலாக் நான் உன்னைத் தலாக் நான் உன்னைத் தலாக் சொல்கின்றேன் என மூன்று தடவைகள் சொன்னால் அதனை ஒரு முறை சொன்னதாகவே கணிப்பிடப்பட்டன என ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறியதை இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பதிவாக்கியுள்ளார்கள். மார்க்கக் கல்விகற்கும் மாணுக்கர்களே! இந்த நபி மொழியை ஆதாரமாகக் கொண்டு ஒருவன் தன் மனைவிக்கு ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் சொன்னால் ஒன்றெனக் கணிப்பாயா? அதனை மூன்று என்றே கணிக்கப்படும் என்பின் முஸ்லிம் ஷரீபில் இடம்பெற்ற ஸஹீஹான ஹதீதிற்கு எப்படி மாற்றம் புரிந்தாய் எனக் கேட்டால் இதற்கு மாற்றமாக நான் மூன்று என்று கருதுவதற்கும் ஆதாரம் உண்டு என்று கூறுவாய். இது போன்றே என் கூற்றின் பதிலும் என்பதைப் விளங்கு என்கின்றார்கள் இந்நூலாசிரியர் இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்.

## சகோதரர்களே!

இமாம் ஷாபிஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறிய சில விடயங்களுக்கும், இமாம் அபூஹனீபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியோர்கள் தத்தமது நூட்களில் இடம்பெறச் செய்த சகல மஸ்அலாக்களுக்கும் ஆதாரங்கள் இல்லாமல் இல்லை. நான்கு பேர்களும் ஏகத்துவ தவ்ஹீத் கொள்கையில் ஒ[illegible] வர்களே தான். குர்ஆன் ஹதீதை

அறிந்து ஆராய்ந்ததன் விளைவாக நான்குபேர்களும் இறைவனின் பேருதவியால் தனித்தனி நூட்களை குர்ஆன், ஹதீதுக்கு புறம்பாகாது முரணாகாது இவ் விரண்டையும் மையமாகக் கொண்டு சமுதாயத்திற்கு அர்ப்பணித்தனர்.

அந்நான்கு பேர்களின் கருத்துக்களும், பாதைகளும் நோக்கங்களும் ஒன்றுபட்டிருந்தும் சில, சில மஸ்அலாக் களில் (மேற்குறிப்பிட்டது போல்) ஒருவர் கூற்று மற்ற வர் கூற்றுக்கு வேறுபட்டதாக தென்பட்டதல்லவா? இவ்விதமாக எமது குறுகிய அறிவாற்றலுக்கு தென் படும் பட்சத்தில் இமாம் அபூஹனீபாவை பின்பற்று வோர் அல்லது இமாம் ஷாபிஈ அவர்களைப் பின்பற்றி நடப்போர் எமது இமாம் அவர்கள் கூறிய கருத்துக்களே சரியானது. மற்றவர் கூறியதற்கு ஆதாரமில்லை என வாதிட முடியுமா? முடியாதுதானே! அவ்விதம் கருதுவதும் தவறுதானே!

ஒருவரின் கருத்து மற்றவர் கருத்துக்கு மாற்றமாகத் தென்பட்டாலும் இருவரும் ஆதாரமில்லாது எவ்வாறு கூறவில்லையோ அவ்வாறே கோமான் ﷺ அவர் களின் அருமைப் பெற்ரோர்கள் விடயத்தில் முஸ்லிம் ஷரீபில் இடம் பெற்றுள்ள நபிமொழியைக் கொண்டு அவர்களின் விடயத்தில் தவறான கருத்தை நிரூபிக்க முடியுமா? முடியவே முடியாது. எனவே நபிகளின் அருமைப்பெற்ரோர் ஜெயம் பெற்ற உத்தமர்கள் என்பதில் எமக்கு ஐயமேயில்லை.

## நபியவர்களின் பெற்ரோர் உயிர்பெற்றெழல்

இத்தலைப்பின் கீழே நாம் நபியுல்லாஹ் ﷺ அவர்களின் அருமைப் பெற்ரோர்களை அல்லாஹ் உயிர்ப்பிக்கச் செய்து நபியவர்கள் மீது ஈமான் கொள்ளச் செய்த அறிவிப்புக்களை எடுத்தாள்வோம். இக்கருத்

தினை நபிமொழி ஆராய்ச்சியாளர்களான இப்னு ஷாஹீன், அபூபக்கர் அல் கத்தீப், சுஹைலீ, குர்துபி, முஹிப்புத்திப்ரீ, நாஸிருத்தீன் பின் அல் முனீர் திமிஷ்கி போன்ற பெரியோர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஹழ்ரத் இப்னு ஷாஹீன் ''அந்நாஸிக் வல் மன்சூக்'' என்ற நூலிலும், கதீப் பக்தாதி ''அஸ்ஸாபிக் வல் லாஹிக்'' என்பதிலும் இமாம் தாரகுத்னீ, ஹழ்ரத் இப்னு அசாகிர் இருவரும் ''கராயிப் மாலிக்'' என்ற நூலிலும், ஹழ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாக ழயீபான சனதுடன் கிடைக்கப்பெற்ற ஹதீதை இக்கூற்றுக்கு ஆதாரம் காட்டுகின்றனர்.

அதாவது:-

عن عائشة رضي الله عنها قالت حج بنا رسول الله صلى الله عليه وسلم حجة الوداع فمر بي على عقبة الحجون وهو باك حزين مغتم فنزل فمكث عني طويلاً ثم عاد الي وهو فرح مبتسم فقلت له فقال ذهبت بقبر أمي فسألت الله أن يحييها فأحياها فآمن بي

மானிட ஜோதி முஸ்தபா ﷺ அவர்கள், இறுதி ஹஜ்ஜான ஹஜ்ஜத்துல் வதாவிற்கு எங்களோடு பிரயாணம் ஆனார்கள். சென்று கொண்டிருக்கும் சமயத்தில் ஹுஜூம் எனும் இடத்தை அண்மித்ததும் கவலையுடன் காணப்பட்டார்கள். அவ்வழியில் ஓர் இடத்திலே இறங்கி என்னை (ஆயிஷா நாயகியார்) அவ்விடத்தில் நிற்கும் படியாகக் கூறி சற்று தூரம் சென்றார்கள். நீண்ட நேரத்திற்கு பின்னர் ரோஜாப்பூ போன்ற செவ்வதனம் கொண்ட நாயகம் அவர்கள் மகிழ்ச்சிகரமாய் மீண்டார் கள். நான் நாயகம் ﷺ அவர்களிடம் அதற்கான காரணத்தை கேட்டபோது

நான் என் அருமைத்தாய் அடக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு சென்று அவர்களை உயிர்ப்பித்து என்னைக் கொண்டு ஈமான் கொள்ளச் செய்யுமாறு வேண்டினேன். இறைவன் அவ்விதம் புரியச்செய்து அவர்களை மீட்டிக்கொண்டான் என்ருர்கள்.

## மேற்கூறிய ஹதீதின் நிலை

இந்நபிமொழி ழயீபே அன்றி மௌழூஃ அல்ல இந் நபிமொழி ழயீஃப் என்பதில் ஒன்றுபட்ட ஹதீதுகளை அறிந்தோர் மௌழூஃ (பொய்யாக இட்டுக்கட்டப் பட்டது) அல்ல என்கின்றனர்.

இந்த ஹதீது பற்றி தெளிவுபடுத்த தனி நூலையே கோர்வை செய்திருக்கின்ருர்கள் இமாம் சுயூத்தி ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள். மேலும் இமாம் சுஹைலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''ரௌழுல் உன்ப்'' என்பதில் நபிகள் பிரான் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பெற்ருேர்களை உயிர்ப் பித்திடுமாறு இருகரம் ஏந்தினுர்கள்.

''ஒரு அடியான் இறை சமூகத்தில் இரு கரமேந்தி மண்டிட்டால் அக்கரம் வெறுமனே திரும்புவதை வெட்கமாக அல்லாஹ் கருதுகிருன்''. (நபிமொழி)

நபியுல்லாஹ் ﷺ அவர்களை கண்ணியப் படுத்தும் முகமாக அவ்விருவரையும் உயிர்ப்பிக்கச் செய்து கலிமா மொழிந்த பின் மீண்டும் மரணிக்கச் செய்தான் என்று ஹழ்ரத் உம்முல் முஃமினீன் ஆயிஷா சித்தீகா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாக குறிப்பிட்டதையும் பதிவு செய்துள்ளார்கள். இதனை அறிவித்தோர்களில் இருவர் அறியப்படாதவர்களுமாவர்.

## இறையின் ஆற்றல்

இமாம் சுஹைலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்

கள் இவ்வறிவிப்பை எடுத்தியம்பிய பின்னர் இறைவன் எதற்கும் சக்தி பெற்றவன். அவனுக்கு தகுந்த எவையும் முடியாதது அல்ல. அவனை முடியாமலாக்க எதுவுமே யில்லை. அவன் நாடியதையும் அவனிடம் அவனது தூதர் நாடியதையும் கொடுப்பான் கொடுத்து சிறப்பித்து முள்ளான் என்பதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் அல்லாமா குர்துபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நபிகள் பிரான் ﷺ அவர்களின் அருமைப் பெற்றோர்களை உயிர்ப்பிக்கப்பட்ட ஹதீதை அவர்களின் பெயரில் இஸ்திஃபார் செய்ய வேண்டாம் என்பதாக கூறப்பட்ட ஹதீதோடு தொடர்புபடுத்திப் பார்க்காதே. ஏனெனில் அவ்விருவரும் உயிர்ப்பிக்கப் பட்டதாக ஹழ்ரத் ஆயிஷா நாயகியின் அறிவிப்பு இறுதி ஹஜ்ஜின் சமயத்திலேயே நிகழ்ந்துள்ளதால் அதற்கும் இதற்கும் தொடர்பு இருக்க சாத்தியமில்லை என்பதாக கூறுகின்றார்கள். இதன் காரணமே அல்லாமா இப்னு ஷாஹீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முதல் சம்பவத்தை இரண்டாவது சம்பவம் மாற்றி (நாஸிக் காக்கி) விட்டது என்கின்றார்கள்.

## ரசூலுல்லாஹ்விற்காக மரித்தோரை உயிர்ப்பித்தல்

அல்லாமா நாஸிருத்தீன் முனீர் மாலிக்கி ரஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்கள் ''அல் முக்தபா பீ ஷரஃபில் முஸ்தபா'' எனும் நூலில் ரசூலே கரீம் ﷺ அவர் களுக்காக மரித்தோரை உயிர்ப்பிக்கச்செய்த நிகழ்வுகள் ஹழ்ரத் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அவர் கள் கரத்தால் நிகழ்த்தப்பட்ட நிகழ்வுகள் போன்றது என்கின்றார்.

நபிகள் பிரான் ﷺ அவர்கள் காபிர்களுக்கு பாவ மன்னிப்புக் கோர வேண்டாம் எனக் கட்டளை

பிறப்பிக்கப்பட்டதும் தனது பெற்றோர்களை உயிர்ப் பிக்கச் செய்து தன்னை ஈமான் கொண்டோராக்கு என இருகரம் ஏந்தியதும் அல்லாஹ் அவர்கள் வேண்டு கோளைப் பூர்த்தியாக்கினான் என்பதாகவும் குறிப்பிட் டுள்ளார்கள்.

நபியுல்லாஹ் ﷺ அவர்களின் வாழ்க்கை யிலும் வாழ்க்கையின் மறுமை பின்பும் அவர்கள் நிலைமை உயர்ந்ததே! சென்ற வினாடியை விட எதிர் வரும் வினாடி மேலானது என்பது இமாம் குர்துபியின் கூற்று. அதுவே குர்ஆனின் கூற்றும் எமது கொள்கை யும். இவ்விதமே தான் நபியவர்களின் பெற்றோர்கள் உயிர்ப்பிக்கச் செய்யப்பட்டு அவர்கள் கரத்தில் ஈமான் கொண்டு பின்னர் மரிப்பது எமது மார்க்கத்திற்கோ, புத்திக்கோ புதுமையானதல்ல. முன் சென்ற சமூதாய நபிமார்கள் மரித்தோர்களை உயிர்ப்பிக்கச் செய்ததாக குர்ஆனே சான்றுயிருக்கையில் எமது நாயகம் ﷺ அவர்கள் காலத்தில் உயிர்ப்பித்தெழுந்ததில் ஆச்சரியம் தான் என்ன? மரித்த பின்பும் உயிர்ப்பிக்கப்பட்டது என்பது குர்ஆனின் கூற்று என்றால் நபியவர்களின் பெற்றோர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு ஈமான் கொள்வதில் என்ன சந்தேகம். இதுவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

ஹாபிழ் சம்சுத்தீன் இப்னு நாஸிருத்தீன் அத்திமஷ்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "மௌரிதுஸ்ஸாதீ ஃபீ மௌலிதில் ஹாதியில்"

حبا الله النبي مزيد فضل ‏ ‏ على فضل وكان به رووفا

فاحيا امه وكذا اباه ‏ ‏ لايمان به فضلا لطيفا

فسلم فالقديم بذا قديرا ‏ ‏ وان كان الحديث به ضعيفا

அல்லாஹுத்தஆலா நபியுல்லாஹ் ﷺ அவர்

கள் மீது கொண்ட அன்பின் காரணமாக சிறப்பிற்கு மேல் சிறப்புக்களை வழங்கியுள்ளான். அவர்களைச் சிறப்பிக் கும் முகமாகவே அவர்கள் பெற்றோர்களை உயிர்ப்பிக்கச் செய்து அவர்களை கொண்டு ஈமான் கொள்ளச் செய்தான்.

இவ்விடயம் பற்றிய நபிமொழிகள் ழயீபானதை யும் இது இவ்விதமே இடம் பெற இறை ஏற்பாடு இருந்த தனால் நீயும் அதனை ஏற்றுக் கொள் என்ற கஸீதாவை நம்மை நோக்கிப் படித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

உலமாக்களில் சிலர் முஸ்லிம் ஷரீபில் இடம்பெற்ற ஹதீதை குறிப்பிட்ட பின் இவ்விடயத்தில் எவரும் எதுவும் பேசலாகாது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இமாம் சுஹைலீ அவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நோவினை செய்வோரை சபிக்கின்றான் என்ப தாக இறைவசனமும் ''லாதுஃதுல் அஹ்யாய பிசப்பில் அம்வாதி'' மரித்தோரை ஏளனமாகப் பேசுவது கொண்டு உயிருள்ளோரை துன்புறுத்தாதீர்கள் என்பதாக நபி திருமொழியும் இருப்பதால் நபியவர்களின் பெற்றோர் விடயத்தில் எதுவும் பேசலாகாது என முஸ்லிம் ஷரீபில் பதிவாகியுள்ள நபிமொழியை குறிப்பிட்டபின் குறிப் பிட்டுள்ளார்கள்.

மாலிகி மத்ஹபின் இமாம்களில் ஒருவரான காழி அபூபக்ர் பின் அல் அரபியிடம் நபியுல்லாஹ் ﷺ அவர்களின் பெற்றோர்கள் நரகில் எனக்கூறும் ஒருவன் பற்றிக் கேட்கப்பட்டதும் அவ்விதம் கூறுபவன் நாச மாகட்டும் என சாபமிட்டு விட்டு அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நோவினை செய்வோரை அவ் விருவரோடு, இரு உலகில் உள்ளோரும் சாபமிடுகின்ற னர் என்ற வசனத்தையும்,...

பல அறிஞர்கள் இவ்விடயத்தில் மௌனத்தையே கடைபிடித்திருக்கின்றனர். ஷெய்க் தாஜுத்தீன் அல்

பாகீஹானி "அல் பஜ்ருல் முனீர்" என்ற தனது நூலில் "அல்லாஹு அஃலமு பிஹாலி அபவைஹி" அல்லாஹ்வே நபியவர்கள் பெற்றோர் விடயத்தை நன்கறிந்தவன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் இப்னு அஸாகிர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது தாரீக் எனும் நூலில் ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் பணிவிடையாளர் நௌபல் பின் அல் குராத் கூறியதாக யஹ்யா பின் அப்துல் மாலிக் அவர்கள் ரிவாயத் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளதாவது.

எங்களிடம் ஷாம் தேசத்தின் நம்பிக்கையான பதவிகளை நிர்ணயிக்கும் மேலதிகாரி ஒருவர் இருந்தார். அவர் நெருப்பை வணங்கும் ஓர் பெண்ணுடன் தவறான தொடர்பு வைத்திருந்த ஒருவரின் மகனை ஓர் பகுதிக்கு அதிபராக நியமித்திருந்தார். இச்செய்தி மன்னர் சபையை சென்றடைந்ததும் மன்னர் அம்மனிரை அழைத்து தீய செயல்களைப் புரிந்து கெட்ட நடத்தைகளைக் கொண்ட ஒருவரின் மகனை முஸ்லிம்கள் பகுதிக்கு அதிபராக்க உமக்கு அனுமதித்தது யாரென்று கேட்டார். அவரோ அமீருல் முஃமினீனின் ஸலாமத்துடன் நீண்ட காலம் வாழப் பிரார்த்தித்த பின்பு இவ்விதம் புரிந்ததனால் என் மீது எக்குற்றமும் இருக்க முடியாது. காரணம் ரசூலுல்லாஹ் ﷺ அவர்களின் பெற்றோர்களும் முஷ்ரிக்காகத்தான் இருந்தனர் என்றார்.

இதனைச் செவியுற்ற அமீருல் முஃமினீன் அவர்கள் கர்ஜித்தெழுந்து தலையைக் குனிந்து சற்று நேரம் மௌனியான பின் தலையை உயர்த்தி என்ன இவன் நாவை துண்டித்து விடட்டுமா? அல்லது கரத்தை துண்டிக்கட்டுமா? அல்லது கால்களை இல்லாமலாக்கட்டுமா? அல்லது இவனையே கொன்று விடட்டுமா? என சினம் கொண்டவராகக் கூறிய பின்னர் நான் உயிருடன் இருக்

கும் வரை இவனுக்கு எந்த பதவியும் இல்லை என்ருர்கள்.

இப்படியாக இந்நூலினை முடிக்கலாம் எனக்கருதி பேனு முனையை தொட்டபோது சிலர் இதுவரை நிரூபித்துக்காட்டிய சகல அம்சங்களையும் சுருக்கமாக கவி நடையிலும் கூறி முடியுங்கள் எனக் கேட்டதற்கிணங்க இதோ இவைகளை சில வரிகளில் கூறுகின்றேன்.

انّ الذي بعث النبيّ محمدا انجى به الثقلين مما يجحف

ولامه وابيه حكم شائع ابداه اهل العلم فيما صنفوا

فجماعة اجروهما مجرى الذي لم يأته خبر الدعاة المسعف

والحكم فيمن لم تجله دعوة ان لاعذاب عليه حكم مؤلف

فبذالك قال الشافعية كلهم والاشرعية ما بهم متوقف

فلقد تدين فى زمان الجاهلية فرقة دين الهدى وتحنفوا

زيد بن عمرو بن نفيل هكذ الصديق ماشرك عليه يعكف

اقد فسر السبكى بذاك مقالة للاشعرى وما سواه مزيف

ان لم يكن عين الرضاء منه على الصديق وهو بطول عمر احنف

عادت عليه صحبة الهادى فما فى الجاهلية للضلالة يعرف

فلامه وابوه احرى سيم دابت من الآيات ما لا يوصف

اوجماعة ذهبوا الى احيائه ابويه حتى آمنا لاخوفوا

وروى ابن شاهين حديثا مسندا فى ذالك لكن الحديث مضعف

هذى مسالك لو تفرد بعضها لكفى فكيف لها اذا تتألف

ويحسب من لا يرتضيها صمته ادبا ولكن اين من هو منصف

صلى الاله على النبي محمد ماجد الدين الحنيف محنف

அழிந்துபோகும் நிகழ்வுகளிலிருந்து மனு ஜின் இரு வர்க்கத்தையும் யாரைக்கொண்டு பாதுகாப்பானோ அத்தகையவன் முஹம்மத் ﷺ அவர்களை நபியாக அனுப்பினான். நபியுல்லாஹ் அவர்களின் தாயும் தந்தையும் ஜெயம் பெற்றவர்கள் என்பது யாவரும் அறிந்த பிரபல்யமிக்கதாகும். அறிஞர்கள் இதனை நூற்களிலும் கோர்வை செய்துள்ளனர்.

அறிஞர்களில் ஒரு கூட்டம் இவர்களின் அருமைப் பெற்றோர்களை இஸ்லாமிய புனித அழைப்பு சென்றடையாது மரணமுற்ற கூட்டத்துடன் சேர்ந்தவர்கள் என்கின்றனர்.

எவர்கள் இஸ்லாமிய அழைப்பு சென்றடையாத நிலையில் மரித்தனரோ அவர்களுக்கு வேதனை அளிக்கப் பட மாட்டாது.

இக்கருத்தே இமாம் ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்தோர்களினதும் அஷ்அரிய்யாக்களினதும் கருத்தாகும்.

சூரா இஸ்ராஃவில் இதற்கான ஆதாரம் உண்டு இது போன்று இச்சம்பவம் பற்றிய திருமறை வசனங்கள் பிரபல்யமானதாகும்.

சட்ட மேதைகளில் சிலர் இது சம்பந்தமாக தெளிவான முறையில் அழகிய நடைமுறையில் விளக்கமளித்துள்ளனர்.

அவர்களில் சிலர் நபியவர்களின் பெற்றோர்கள் ஃபித்ரத்துடைய காலத்தில் வாழ்ந்து மறைந்தவர்கள். இருந்தும் அவர்களில் நின்றும் நித்திய மார்க்கத்திற்கு

எதிரான எச்செயலும் நிகழவில்லை என்கின்றனர்.

இமாம் மௌலானா பக்ருத்தீன் ராஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்விருவர் பற்றிக் கேட்பதற்கே இனிமையான வார்த்தைகளை உபயோகித்துள்ளனர்.

நபிகளார் ﷺ அவர்களின் அருமைப் பெற்றோர்கள் யாவரும் ஏகத்துவ தௌஹீத் கொள்கையில் தான் நிலை கொண்டவராயிருந்தனர் என்பது முதற் கருத்து. ஹஜ்ரத் ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் முதல் எம் கோமான் ﷺ அவர்களின் தந்தை ஹஜ்ரத் அப்துல்லாஹ் வரையான சகல பெற்றோர்களில் எவரும் முஷ்ரிக்காகவோ தௌஹீதை வெறுப்போராகவோ இருந்ததில்லை. சூரா தௌபாவில் முஷ்ரிக்கீன்கள் அசுத்த மானவர்கள் என்ற ஆயத்தின் பிரகாரம் நபியவர்களின் பெற்றோர்கள் சுத்தமானவர்கள் என்பதாக தெளிவு படுத்துகின்றது.

இவைகள் யாவும் இமாம் அஷ்ஷெய்க் பக்ருத்தீன் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் ''அஸ் ராருத் தன்ஸீல்'' என்ற நூலின் முத்துக்களே! படிப்ப தனால் கண்கள் கண்ணீரை மழையாகக் கொட்டுகின்றது.

அர்ஷுக்குச் சொந்தமான நாயன் அவர்களுக்கு கூலிகளில் அழகிய கூலியையும், அழகிய அருட் கொடைகளைக் கொண்ட பல அருட்களையும் வழங்கு வானாக. மௌட்டீக காலத்திலே ஓர் கூட்டத்தினர் நேர் வழியில் நிலை இருந்து வந்தனர். இவர்களில் ஸைத் பின் அம்ரு பின் நௌபல் மற்றும் ஹழ்ரத் ஸித்தீகுல் அக்பர் போன்றோர் அடங்குவர். இவர்கள் என்றுமே சிலை வணக்கம் புரியவில்லை.

இமாம் சுபுகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இதனை தெளிவுபடுத்தி தனிப்பிரதியே எழுதியுள்ளார் கள். இதுதவிர இமாம் அஷ்அரீ அவர்களும் வரைந்

துள்ளது குறிப்பிடத்தக்கது. ஹழ்ரத் சித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாழ்நாள் முழுவதும் தௌஹீத் கொள்கையிலேயே வீற்றிருந்தார்கள்.

இவ்வரிய சந்தர்ப்பம் நபியுல்லாஹ்வின் தோழரான பின்னர் இருப்பார் என்பதனுல் தான் மௌட்டீகக் காலத்தில் கூட ஷிர்க்கான காரியங்களைப் புரியாது இருந்து வந்தனர்.

ஸித்தீகுல் அக்பரை விட நபியவர்களின் தாய்க்கும் தந்தைக்கும் ஷிர்க்கின் காரியங்களைப் புரியாது பாதுகாக்க மிக அருகதையானவர்கள் அவ்விருவரும் பெரும் பெரும் அத்தாட்சிகளைக் கண்ணுற்றவர்கள். மற்றுமொரு அறிஞர்கள் கூட்டம் நபியவர்களின் பெற்ரோர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு ஈமான் கொண்டனர் என்கின்றனர்.

இப்னு ஷாஹீன் அவர்கள் இதற்கு ஓர் ஹதீதை அறிவிப்பு செய்துள்ளார்கள். அது ழயீபானதுமாகும். இதனை பல பிரிவுகளாக தனித்தனி தலையங்கத்தில் கூறியது பொது நலன் கருதியே. இப்போது இவை அனைத்தையும் ஒன்று சேர்த்தால் மரியாதைக்காக மௌனியாக இருந்தவன் பொருந்திக் கொள்ளமாட்டான். தூய்மை நிறை இம்மார்க்கம் புதுப்பிக்கப்பட்டும் காலமெல்லாம் நபிகளார் அவர்கள் மீது ஸலவாத் சலாம் உரைப்பானாக.

## தொழுகையை விட்டுவிட்டு பதிலுரைத்தல்?

عن طلق بن علي قال سمعت رسول الله صلّى الله عليه وسلّم يقول لو ادركت والدي اواحدهما وانا في صلوة العشاء وقد قرئ فيها بفاتحة الكتاب فنادي يامحمد لأجبتهما لبيك.

நான் இஷாத் தொழுகைக்காக தக்பீரத்துல் இஹ்ராம் கட்டி ஃபாத்திஹா சூராவையும் ஓதி முடித்த நிலையில் இருக்கையில் எனது பெற்ருேர்களில் ஒருவர் அழைத் தால், நான் தொழுகையை விட்டுவிட்டு அவர் அழைப் பிற்கு பதிலுரைப்பேன் என ரசூலே கரீம் ﷺ அவர்கள் கூறியதை ஹழ்ரத் அபுல் ஹுஸைன் பின் புஷ்ர் கூறியதாக இமாம் பைஹகீ ஷுஃபுல் ஈமானில் குறிப்பிட்டுள்ளார்கள். இதனை ரிவாயத் செய்வோரில் யாசீன் பின் முஆத் என்பவர் மட்டும் முயீபானவர் என்பதாக இமாம் பைஹகீ கூறுகின்றூர்கள்.

அல்லாமா அஸ்ரகீ தாரீக் மக்கா எனும் நூலில் ஹிஷாம் பின் ஆஸிமுல் அஸ்லம் கூறியதாக குறிப் பிட்டுள்ளதாவது:-

குறைஷிகள் உஹதுப்போர்க்களம் நோக்கிச் செல்கையில் அப்வாஃ எனும் இடத்தை சேர்ந்ததும் அபூசுப்யானின் மனைவி ஹின்து இவ்விடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் நபிகளாரின் தாயின் கப்ரை கண்டுபிடித்து அதனைத் தோண்டி எடுப்போமே யானல் முஸ்லிம்கள் எங்கள் தோழர்களை சிறைபிடிப்ப தற்கு பகரமாகி விடும் என்ருர்கள். இந்த யோசனையை அபூசுப்யான் தோழர்களிடம் எடுத்துரைக்கையில் வேண்டாம். நாம் இவ்விதம் புரிந்தால் பனூபக்ர் கோத்தி ரத்தார் நமது முன்னேர்களின் புதைகுழிகளை தோண்டி விடுவார்கள் என்றனர்.

இறுதியாக இமாம் முவப்பிகுத்தீன் பின் குதாமா ஹன்பலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முஸ்லி மானவனுயினும், காபிராயினும் நபியுல்லாஹ் அவர் களின் பெற்ருேர்கள் விடயத்தில் அவர்களுக்குத் தகாத வார்த்தையான (முஷ்ரிக்) என்பதை பாவிப்பவன் கொலை செய்யப்பட வேண்டும் எனக்கூறிய கருத்தை

இங்கும் கூறி நிறைவாக்குகிறேன்.

அல்லாஹ் எம் கோமான் صلى الله عليه وسلم அவர்களின் பரக்கத்தால் எனக்களித்த மாபெரும் அருளினால் நபி யவர்களின் பெற்றோர்கள் என்ற அரபி நூலிற்கான மொழி பெயர்ப்பை முடிக்கின்றேன்.

யா அல்லாஹ்! நபிகளாரின் பொருட்டால் இச்சிறு பணியை ஏற்றுக் கொள்வாயாக. நபிகளாரினதும், அவர்கள் பெற்றோர்கள், ஏனைய நபிமார்கள், வலிமார் கள் உதவியால் சம்பூரண முஸ்லிம்களின் பெற்றோர் களையும் மன்னித்து அருள் புரிவாயாக! ஆமீன்.

## நபிகள் நாயகம் ﷺ அவர்கள் பெற்றோர்கள் சம்பந்தமாக தொகுக்கப்பட்ட நூற்களாவன:-

1. ஆமினா பின்த் வஹ்ப்:- ஆயிஷா அப்துல் ரஹ்மான்

2. அஹாதீத் ஃபீ நஜாதி அபவை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்:- இமாம் சுயூதி

3. புலூகுல் மஆரிப் ஃபி நஜாதி ஆபாயிஹி:- சுலைமான் அல் அஸ்ஹரி

4. உம்முந் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்:- பின்த் ஷாதிஃ

5. அன்பாஃ அல் இஸ்திஃபா ஃபீ ஹக்கி ஆபாயில் முஸ்தபா:- முஹம்மத் பின் காசிம்

6. அல் இன்திஸார் லிவாலிதையில் முக்தார்:- முர்தழா ஸுபைதி

7. ஈஜாசுல் கலாம் ஃபீ வாலிதை ஸையிதில் அனாம்:- அபீபுத்தீன் திப்ரீஸி

8. தஹ்கீக் ஆமாலிர் ராஜீன்:- நூருத்தீன் அலி

9. அத்தஃழீம் வல்மின்னதி ஃபி அன்ன அபவை வந்நபி ﷺ ஃபில் ஜன்னதி:- ஜலாலுத்தீன் சுயூதி

10. அல் ஜௌஹரதுல் மழிய்யா ஃபி ஹக்கி அபவை கைரில் பரிய்யா:- ஸாலிஹ் பின் முஹம்மத்

11. ரிஸாலா ஃபி அபவை அந்நபி:- நூருத்தீன் அலி பின் சுல்தான்

12. ரிஸாலா ஃபி அபவை அந்நபி:- முஹம்மத் ஷாஹ் அல் பனாரீ

13. ரிஸாலா ஃபீ இத்பாதின் நஜாதி வல் ஈமான் லிவாலிதை ஸெய்யிதில் அக்வான்:- அலி பின் ஸாதிக்

14. ரிஸாலா ஃபீ வாலிதையிர் ரசூல்:- இமாம் சுயூதி

15. சுபுலுஸ் ஸலாம் ஃபீ ஹுக்மி ஆபாயி ஸையிதில் அனும்:- முஹம்மத் உமர்

16. சுபுலுந் நஜாத் ஃபீ வாலிதையின் நபி:- ஹாபிழ் சுயூதி

17. அல் கௌலுல் முக்தார் ஃபீமா யதஅல்லகு பிஅபையிந் நபிய்யில் முக்தார்:- அஹ்மத் பின் உமர்

18. கிதாப் ஃபீ அஹ்வாலி வாலிதையிர் ரசூல்:- இமாம் கஸ்ஸாலி

19. முர்ஷிதுல் ஹுதா ஃபீ நஜாதி அபவை அந்நபிய்யில் முக்தார்:- இப்ராஹீம் முஸ்தபா

20. மத்லஉன் நய்யிரைன் ஃபீ இத்பாதின் நஜாதி வத்தரஜாதி லிவாலித் ஸையிதில் கௌனைன்:- அஹ்மத் பின் அலி

21. ஹிதாயல் கிராம் ஃபீ தன்ஸீஹி ஆபாயின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்:- யூசுப் அப்தில்லாஹ்.